திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில்

# திருக்கோணேச்சரம்

(ஆய்வு)



தம்பலகாமம். த. ஜீவராஜ்

Made with PosterMyWall.com

# திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேச்சரம் (ஆய்வு)

தம்பலகாமம். த. ஜீவராஜ்

tjeevaraj78@gmail.com

உரிமை - CC-BY-NC-SA கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/thirugnanasambanthar_thirukonacharam

அட்டைப்படம் - தம்பலகாமம். த. ஜீவராஜ் - tjeevaraj78@gmail.com

மின்னூலாக்கம் - லெனின் குருசாமி -

gurulenin@gmail.com

கணியம் அறக்கட்டளை (kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: தம்பலகாமம். த. ஜீவராஜ் - tjeevaraj78@gmail.com

மின்னூலாக்கம்: லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

# Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: T. Jeevaraj - tjeevaraj78@gmail.com

Ebook Creation: Lenin Gurusamy - guruleninn@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

பதிவிறக்கம் செய்ய - *http://freetamilebooks.com/ebooks/thirugnanas
ambanthar_thirukonacharam*

*This Book was produced using LaTeX + Pandoc*

# பொருளடக்கம்


என்னுரை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 9

காப்புரிமைத் தகவல் . . . . . . . . . . . . . . . . . . . . 12

1. கி..பி 1600 ஆண்டுகளில் திருக்கோணேச்சர ஆலய தரிசனம் (புகைப்படங்கள், ஓவியங்கள் உதவியுடன்) . . 14

2. திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் . . . . . . 38

3. திருஞானசம்பந்தர் அருளிய திருக்கோணமலைத் திருப்பதிகம் . . . . . . . . . . . . . . . . . . . . . 72

4. மறைந்துபோன திருக்கோணேச்சர வரலாற்று நூல் பெரியவளமைப் பத்ததி . . . . . . . . . . . . . . . . 78

FREETAMILEBOOKS.COM . . . . . . . . . . . . . . . . 86

கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . . . . . . . . 101

நன்கொடை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 108

# என்னுரை



…

கடந்த காலங்களில் எமது இருப்புக்கள் தொடர்பான இடர்பாடுகள் எழும்போது பெரும்பாலும் உணர்வுபூர்வமான எதிர்வினைகளே ஆற்றப்படுவது வழக்கமாக இருந்தது. ஆனால் ஒரு ஆரோக்கியமான மாற்றமாக இம்முறை திருக்கோணேச்சரத்தின்

வரலாறு தொடர்பான கேள்விகள் எழுந்தபோது முன்புபோல் இல்லாது அதற்கான எதிர்ப்பினை அறிவியல்பூர்வமாக பலரும் முன்னெடுத்து வருவது நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

பல இளம் தலைமுறையினர் திருக்கோணேச்சர ஆலய வரலாறு தொடர்பில் அதிக ஆர்வம் காட்டி வருவது மகிழ்ச்சி தருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு வலைப்பதிவில் எழுதப்பட்ட கட்டுரை இங்கு மின்னூலாக்கப்பட்டிருக்கிறது..

தமிழ் பக்தி இயக்கத்தில் தூர சிந்தனையுடன் மிகவும் திட்டமிட்ட முறையில் தேவாரப் பதிகங்கள் ஊடாக மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு இயக்கத்தை வழி நடத்திச் சென்றவர்களில் முதன்மையானவராக கருதப்படுபவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அவர்கள். திருக்கோணேச்சரத்துக்கு தலயாத்திரை செய்யாமலே அங்கு சென்றுவந்த அடியார்கள் மூலம் அறிந்து கொண்டவற்றைக் கொண்டு அவர் பாடிய திருக்கோணேச்சர பதிகம் தொடர்பில் ஆராய்கிறது இந்நூல்.

இவற்றோடு கி.பி 1624 இல் திருக்கோணேச்சரம்

போத்துக்கீசரால் அழிவடைவதற்கு முன்னர் எவ்வாறு இருந்திருக்கும் என்பது தொடர்பான ஒரு கட்டுரையும், ஆவணப்படுத்தப்படாமல் மறைந்து போய்விட்ட திருக்கோணேச்சரம் தொடர்பான வரலாற்று நூலான பெரியவளமைப் பத்ததி தொடர்பான கட்டுரையும் தேவை கருதி சேர்க்கப்பட்டுள்ளது.

வலைப்பதிவிலும், சமூக வலைப்பக்கங்களிலும், நேரிலும் தொடர்ந்து உற்சாகமூட்டிவரும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

நட்புடன் ஜீவன்.

*Dr.த.ஜீவராஜ் ( MBBS, MCGP)*

*[www.geevanathy.com](http://www.geevanathy.com/)*

*tjeevaraj78@gmail.com*

*19.07.2020.*

## காப்புரிமைத் தகவல்

…

இந்த மின்னூல் *Creative Commons Attribution-NonCommercial-ShareAlike* குறிப்பிடுதல் – இலாப நோக்கமற்ற – அதே மாதிரிப் பகிர்தல்(*CC-BY-NC-SA*) என்ற பதிப்புரிமையின் (*Copyright*) கீழ் பகிரப்படுகிறது.

**மூல உரிமங்கள்**

***Attribution குறிப்பிடுதல் / Attribution (by)***

ஆக்கங்களை படியெடுக்க, விநியோகிக்க, பகிர, காட்சிப்படுத்த, இயக்க, வழிபொருட்களை உருவாக்க ஆகிய உரிமைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் தகுந்த

முறையில் அல்லது வேண்டப்பட்ட முறையில் படைப்பாளிகள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மூல படைப்பாளி மற்றும் மூல படைப்பு கிடைக்கும் இடம் போன்ற தகவல்களை அளித்தே பகிர வேண்டும்.

***Non-commercial இலாபநோக்கமற்ற / NonCommercial (nc)***

ஆக்கங்களை படியெடுக்க, விநியோகிக்க, காட்சிப்படுத்த, இயக்க, வழிபொருட்களை உருவாக்க ஆகிய உரிமைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இலாப நோக்கமற்ற நோக்கங்களுக்கு மட்டுமே. விற்பனை செய்யக்கூடாது.

***Share-alike அதே மாதிரிப் பகிர்தல் / ShareAlike (sa)***

வழிபொருட்களை முதன்மை ஆக்கத்துக்குரிய அதே உரிமங்களோடே விநியோகிக்க முடியும்.

# 1. கி..பி 1600 ஆண்டுகளில் திருக்கோணேச்சர ஆலய தரிசனம் (புகைப்படங்கள், ஓவியங்கள் உதவியுடன் )

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிவபூமியாக விளங்கிய ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்கள் கிழக்கே திருக்கோணேச்சரம், வடமேற்கே திருக்கேதீஸ்வரம், வடக்கே நகுலேஸ்வரம், மேற்கே முனீஸ்வரம், தென்கிழக்கே தொண்டீஸ்வரம் என்பனவாகும்.

இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமான திருகோணமலையில் மேற்குறித்த பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றான திருக்கோணேச்சரம் அமைந்துள்ளது. திருகோணமலையில் கடலுக்குள் நீண்டு இருக்கும் கோணமாமலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்றின் உச்சியிலே " குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும்



…

கோணமாமலை அமர்ந்தாரே ” என்று திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட இக்கோயில் உள்ளது.

நம்மில் பலர் வரலாற்றுப் பகழ்மிக்க திருக்கோணேச்சரத்தினை வாழ்நாளில் ஒருமுறையேனும் தரிசித்திருப்போம். எனினும் புகைப்படங்கள், ஓவியங்கள் துணையுடன் நான் உங்களை இப்போது அழைப்பது ***1624*** இல் போத்துக்கீசர் அழிப்பதற்குமுன் இருந்த திருக்கோணேஸ்வர ஆலய தரிசனத்திற்காகும். இந்தப்பயணம் நம்மைச் சுமார் ***400*** ஆண்டுகள் முன்னோக்கி அழைத்துச் செல்லும்.

கி.பி. 1624 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயத் தளபதியாகவிருந்த கொன்ஸ்டன்டைன் டீசா கோயில்களை இடித்து அதில் கிடைத்த கற்களைக் கொண்டு **திருமலைக் கோட்டையைக்** கட்டினான். எனவே கோணேசர் ஆலயப்பயணத்தில் நாம் கோட்டையை நெருங்கும் போது கோட்டையிலுள்ள ஒவ்வொரு கல்லும் போர்த்துக்கேயர் உடைக்கும் முன்பிருந்த ஆலயங்களின் பிரமாண்டத்தினை நமக்குச் சொல்பவையாக இருக்கின்றன.




**திருமலைக் கோட்டை**

*1624ம் ஆண்டில் போர்த்துக்கேயப் படைவீரர்கள் கொன்ஸ்ரன்ரயின் டீசா என்பவனுடுடைய தலைமையிற் கோயிலினுட் புகுந்தனர். எதிர்த்தவர்களை வெட்டிக்கொன்றுவிட்டு கோயிலிலிருந்த தங்க, வெள்ளி நகைகளையும், விலைமதிப்புமிக்க பிறபொருள்களையும்*

சூறையாடிக்கொண்டு சென்றனர்.

அத்தோடு போர்த்துக்கேயர் பீரங்கிகளுடன் மீண்டும் வந்து மூன்று கோயில்களை முற்றாக அழித்தனர். அவற்றோடு ஆயிரங்கால் மண்டபமும் , பெரியதொரு தீர்த்தக்கேணியும், பிறமண்டபங்களும் அழிந்தன. இவற்றோடு தங்கநிற மையினால் பூசப்பட்ட 7 அடுக்குகளை உடைய தங்கரதம் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. இந்நிகழ்வுகளை அவர்கள் வரலாற்றுச் சான்றாக எழுதி வைத்த குறிப்புகளிலும், வரைந்து வைத்த படங்களிலும் இருந்து அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

பண்டைய பிரமாண்டமான கோவிலின் சரித்திர ஆதாரங்கள் எல்லாம் கோட்டை மதில் சுவருக்குள் இன்றும் ஆராயப்படாமல் மறைந்திருக்கிறது. காலணித்துவ ஆட்சிக்காலம் முதல் இக்கோட்டை இராணுவமையமாகச் செயற்பட்டு வருவதனால் சுதந்திரமான வரலாற்றுத்துறை ஆய்வுக்கு உட்படாமல் இருக்கிறது.




இப்போது நாம் திருமலைக்கோட்டை வாயிலில் நிற்கிறோம். இங்கு கோட்டை வாயிலில் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் ஒரு தூணில் இரட்டை மீன் (இணைக்கயல்கள்) இலட்சினை காணப்படுகிறது. இது சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய ஆட்சிக்காலத்தில் (கி.பி 1251 -1271)அவனது துணை அரசனாக

விழங்கிய வீரபாண்டிய மன்னனின் வெற்றிச் சின்னமாகும். மேற்படி இரட்டைக்கயல் சின்னத்தின் கீழ் தடித்த வெண்மை பூசப்பட்ட இடத்தில் முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை ... என்று தொடங்கும் கல்வட்டு காணப்படுகிறது.

400 ஆண்டுகளுக்கு முந்திய நமது திருக்கோணேச்சர ஆலய தரிசன முயற்சியில் இந்தக்கோட்டையில் உள்ள கற்களெல்லாம் கோவில்களாக இருந்திருக்கும் என்றெண்ணியபடி கோட்டை வாயிலைத் தாண்டிச் செல்வோம்.

இப்போது நீங்கள் ஒரு சிறிய குன்றினில் ஏறுவது போன்று உணர்வீர்கள். சிறிது நேரத்தின் பின் நாம் ஒரு சமதரைப்பகுதியை அடைவோம். இங்குதான் திருவிழாக் காலங்களில் மாத்திரம் திறக்கப்படும் **பாவநாச தீர்த்தம்** இருக்கிறது.

பாவநாச தீர்த்தம் இருக்கும் இடத்தின் வீதியின் மறுபக்கம் முன்னர் கச்சேரியும் , அரச பணிமனைகள் இருந்த சமதரைப்பகுதி பின்னர் மோட்டார் போக்குவரத்து பணிமனையாக இருந்தது. இவையனைத்தும் தற்போது இடம்மாறிச் சென்றுவிட இன்று



*IMG_1327.JPG*

வீதியின் இருபக்கமும் இலங்கை இராணுவ பணிமனைகள் இருக்கிறன.

இப்போது இந்த இடத்தில் நின்றுகொண்டு பாவநாச தீர்த்தக் கிணறு இருக்கும் இடத்தில் போர்த்துக்கேயரால் தூர்க்கப்பட்ட பாவநாச தீர்த்தத்தையும், வீதியின் மறுபக்கம் கட்டிடங்களால் நிறைந்திருக்கும் பெரிய சமதரைப்பிரதேசத்தில் பிரமாண்டமான கோபுரத்தை உடைய ஒரு கோவிலையும் உங்கள் மனக்கண்முன் கொண்டுவாருங்கள். அதுதான் வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கோணேஸ்வரம் 1624 இல் போத்துக்கீசர் அழிப்பதற்குமுன் கொண்டிருந்த மூன்று கோவில்களில் ஒன்றான மாதுமை அம்பாள் ஆலயமாகும்.

### மாதுமை அம்பாள் ஆலயம்

தெட்சணகயிலாய புராணத்தின் திருநகரச் சுருக்கம் சொல்லும் இந்த பிரமாண்டமான கோபுரத்தை உடைய மாதுமை அம்பாள் ஆலயம் தேரோடும் வீதியையும் பல மண்டபங்களையும், மடங்களையும் கொண்டிருந்தது. அத்துடன் பாவநாச



குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த
கி. பி. 1624 இல் போத்துக்கீசர் கோவிலை

திருகோணமலை பண்டிதர் இ.வடிவேல் அவர்களின் திருக்கோணேஸ்வ தொன்மையும் வண்மையும் என்னும் நூலில் அவரது வரலாற்று ஆதாரங்களுக்கு அமைய ஓவியப்படுத்தி இருப்பவர் திருமதி.செளந்தரலெட்சுமி சுப்பிரமணியம் அவர்கள்.



…

தீர்த்தத்தைச் சூழ அடியார்களின் உபயோகத்திற்காக ஐந்து கிணறுகளையும் கொண்டிருந்தது. மலை உச்சியில் இருந்த கோணேசப்பெருமான் மாதுமை அம்பாள் ஆலயத்திற்கு எழுந்தருளிய பின்னர் இங்கிருந்துதான் திருகோணமலை நகருக்கான கோணேசர் நகர்வலம் ( இரதோற்சவம் ) ஆரம்பிப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமார் 400 வருடங்களுக்கு முன்னால் அந்த மடங்கள் வெளிநாட்டு பக்த அடியார்களாலும், அவர்கள் இசைக்கும் பக்தி கானங்களாலும் நிறைந்திருக்கும். இப்பொழுது மாதுமை அம்பாள் ஆலயம்,பாவநாச தீர்த்தம் என்பன இருந்த இடத்தில் இருந்து தொடர்ந்து பயணிப்போம்.

இப்போது நாம் இன்னுமொரு சிறு குன்றின்மேல் பயணிப்போம். படத்தில் உள்ளதுபோல் மிகச்சிறியதாக அந்த ஏற்றம் ஏறிப்பின் கொஞ்சம் செங்குத்தாக ஏறி ஒரு சமதரையில் முடியும். இப்போது அந்த இடத்தில் இராணுவக்குடியிருப்பும் , இரண்டாம் உலகமகா யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட விமான



...

எதிர்ப்பு பீரங்கியும், பிரித்தானியரால் அமைக்கப்பட்ட நிலத்தடி நீர்த்தொட்டியும் இருக்கிறது.

1944ம் ஆண்டு மேற்படி நீர்த்தொட்டி அமைக்க அகழ்வு வேலைகள் செய்த பொழுது விஷ்ணு, மகாலட்ஷ்மி (? பூமாதேவி ) விக்கிரகங்கள் கிடைத்தன. அவை இன்றும் தியான மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றன.

இங்குதான் திருக்கோணேச்சரத்தில் குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த காலத்தில் கட்டிய ஸ்ரீ நாராயணமூர்த்தியின் கற்கோவில் அமைந்திருந்தது. உயர்ந்த கோபுரத்தை உடைய இக்கோயிலின் கருவறையில் ஸ்ரீமகாலெட்சுமி சமேத நாராயணமூர்த்தியின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. சுமார் 400 வருடங்களுக்கு முன்னர் இந்த இடம் கிருஷ்ண கீதம் நிறைந்த இடமாக அமைந்திருக்கும்.

தொடர்ந்தும் நம்பயணம் மலை உச்சியில் இருக்கும் திருக்கோணேச்சரர் ஆலயத்தை நொக்கி நகர்கிறது. போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்ரன்ரயின் டீசா திருக்கோணேச்சர



...



…



குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த ஸ்ரீ லெட்சுமி நாராயணர் கோவி
கி. பி. 1624 இல் போத்துக்கீசர் கோவிலை அழிப்பதற்கு முன்னிருந்த தோற்றம்

திருகோணமலை பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் திருக்கோணேஸ்வ தொன்மையும் வண்மையும் என்னும் நூலில் அவரது வரலாற்று ஆதாரங்களுக்கு அமைய ஓவியப்படுத்தி இருப்பவர் திருமதி. சௌந்தரலெட்சுமி சுப்பிரமணியம் அவர்கள்.

ஆலயத்தை அழிப்பதற்கு முன்னால் கோவிலை வரைந்து லிஸ்பொனிலுள்ள போர்த்துக்கீச மன்னனுக்கு கடிதம் அனுப்பினான். அவன் வரைந்த படம்

தனது படத்துடன் அக்கோவில் அமைந்திருந்த நிலத்தின் நீளம் 600 பாகம், அகலம் 80 பாகம் எனவும் மன்னனுக்கான மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1890ஆம் ஆண்டு மத்திய மாகாண அரச அதிபராக இருந்த ஹென்றி.டபிள்யு.கேவ் என்பர் இலங்கை என்னும் தான் எழுதிய சரித்திர நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

போர்த்துக்கீசர் இக்கோவிலை இடித்தழித்த பின்னர் இப்பொழுது அந்த இடம் வெற்றிடமாகக் காட்சியளிக்கிறது. இதனைப் பார்த்தால் யாரும் வருத்தப்படாமல் இருக்க முடியாது. எனினும் இந்துக்கள் அந்த வெற்றிடத்தை சிவழிபாட்டுத் தலமாக வழிபட்டு வருகிறார்கள். தெய்வ நிந்தனைக்குரியதும், வருத்தம் தரக்கூடியதுமான செயலை போர்த்துக்கீசர் செய்தபோதிலும்


FORMA
DO PAGODE DE TRIQVILLIMALE

...

இன்னமும் அந்த இடம் புனிதமும்,மேன்மையும் கொண்ட வழிபாட்டிடமாக இருந்துவருகிறது. எனக் குறிப்பிடுகிறார்.

மேற்கூறிய வரலாற்று நிகழ்வுகளை உள்ளவாங்கியபடி நாம் இப்போது மலையுச்சியில் இருக்கும் திருக்கோணேச்சர ஆலயத்திற்கு வந்து விட்டோம். 400 வருடங்களுக்கு முந்தைய திருக்கோணேஸ்வர ஆலய தரிசனம் ஓவியமாக.

இவ்வாலய சிறப்பினை போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியர் டீ.குவைறோஸ் அடிகளார் இவ்வாறு சொல்கிறார்.

திருகோணமலைத் துறைமுகத்தின் தரைப்பகுதியில் இருந்து கடலுக்குள் நீண்டிருக்கும் மலையில் மூன்று கோவில்கள் உள்ளது. அவற்றில் கடலுக்குள் நீண்டிருக்கும் 400 அடி உயரமான மலையில் இருக்கும் கோணேசர் ஆலயமே மிகப்பிரபல்யமான ஆலயமாகும். கீழைத்தேசத்தவரின் ரோமாபுரியாக இக் கோணேசர் கோவில் விளங்குகின்றது. இராமேஸ்வரத்திற்கும் ,பூரிஜெந்நாத் ஆலயத்திற்கும் வரும் யாத்திரிகர்களைக் காட்டிலும் அதிகமான பக்கதர்கள் இவ்வாலயத்தைத் தரிசிக்க வருகிறார்கள்.



திருக்கோணேச்சரம் - *1935*




திருகோணமலை பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் திருக்கோணேஸ்வ தொன்மையும் வண்மையும் என்னும் நூலில் அவரது வரலாற்று ஆதாரங்களுக்கு அமைய ஓவியப்படுத்தி இருப்பவர் திருமதி. சௌந்தரலெட்சுமி சுப்பிரமணியம் அவர்கள்




திருகோணமலை பண்டிதர் இ. வடிவேல் அவர்களின் திருக்கோணேஸ்வ தொன்மையும் வண்மையும் என்னும் நூலில் அவரது வரலாற்று ஆதாரங்களுக்கு அமைய ஓவியப்படுத்தி இருப்பவர் திருமதி. சௌந்தரலெட்சுமி சுப்பிரமணியம் அவர்கள்.

மேற்படி விபரிப்புக்களும் , புகைப்படங்களும், ஓவியங்களும் உங்கள் மனத்திரையில் மேல் உள்ள ஓவியத்தை உருவாக்கி இருந்தால் அதுதான் நீங்கள் தரிசித்த 400 வருடங்களுக்கு முன்னரான திருக்கோணேச்சர ஆலய தரிசனம்.

## 2. திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில்

திருக்கோணேச்சரம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ‘பல்லவர் கால பக்தி இயக்கங்கள்’ பரந்துபட்ட மக்கள் இயக்கமாக விபரிக்கப்படுகிறது. இவ்வியக்கம் சைவம், வைணவம் என்னும் இருபிரதான கிளைகளாக ஓங்கி அக்காலப்பகுதியில் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகச் செயற்பட்டு அவற்றினைத் தோற்கடித்தது.

கிறுஸ்துவுக்கு சற்று முற்பட்ட காலப்பகுதியில் தமிழகத்தின் தொன்மைச் சமயங்களான சைவமும்,வைணவமும் ஏனைய சமயங்களுக்கு எதிராகத் தொடங்கிய தத்துவப் போராட்டமே பக்தி இயக்கத்தின் ஆரம்பமாகும். எனினும் அவ்வியக்கம் முழுவீச்சில் எழுச்சிபெற்றது கி.பி.6 ஆம் நூற்றாண்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் தமிழகத்தில் பல்லவ மன்னர்களின் ஆட்சி நிலைபெற்றிருந்தது. கி.பி.600 முதல்

கி.பி.900 வரையிலான இக்காலப்பகுதியில் பக்தி இயக்கங்களை உருப்பெறச் செய்தவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களுமாவர்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் தம்சமயக் கொள்கைகளை எல்லோரும் விளங்கக்கூடிய வகையில் இனிய தமிழில் பண்ணிசைத்துப் பாடல்களாகப் பாடினார்கள். இவ்வாறு இசைத்தமிழால் இறைவனைப் பாடி தமிழர்களின் சமயத்தினை மீழ்எழுச்சி செய்வதற்கான போராட்டத்தினை முதலில் தொடங்கி வைத்தவர் ஒரு பெண் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. அவர் தமிழுக்கு ‘அந்தாதி’ என்னும் இலக்கண முறையை அறிமுகம் செய்த ‘காரைக்கால் அம்மையார்’ ஆவர். இவருடைய பதிகங்களின் முறையைப் பின்பற்றியே பின்னாட்களில் தேவாரங்கள் இயற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

காரைக்கால் அம்மையாருடன், திருமூலரும், முதல் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தினை 6ஆம் நூற்றாண்டில் தொடங்கி வைத்தவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். இவர்களைத் தொடர்ந்து **கி.பி 7**ஆம் நூற்றாண்டில் சமய எழுச்சிக்கான

போராட்டத்தினை பரந்துபட்ட மக்கள் போராட்டமாக்கிய பெருமை திருநாவுக்கரசரையும், திருஞானசம்பந்தரையும்சாரும். இவர்கள் சைவ பக்தி இயக்கத்தின் தலைமையை ஏற்று தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து தமிழிசை மூலம் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர்.

இவ்விருவரின் பின்னால் காரைக்கால் அம்மையார் தொடங்கி வைத்த பணியினை திலகவதியார், மங்கையற்கரசியார் ,சுந்தரமூர்த்திநாயனார் , மாணிக்கவாசகர் மற்றும் ஆழ்வார்கள் தொடர்ந்து வழிநடத்திச் சென்றனர். இதனால்அதுவரைகாலமும் அரசர்களையும், செல்வந்தர்களையும் பாடுவதற்குப் பயன்பட்ட பாடல்கள் தமிழ் கடவுளைப் பாடுவதற்கு மட்டுமே இனிப் பயன்பட வேண்டும் என்ற கொள்கை வளர்ந்தது. சாதிமுறை வலுவாக நிலவிய அந்தக்காலத்தில் அனைத்து மக்களும் சமம் , இறையடியார்கள் அனைவரும் வணங்கத்தக்கவர்கள் போன்ற சீர்திருத்தக் கருத்துக்கள் வலிமை பெற்றன.

கற்றவர்களுக்கு மட்டுமே உரிமையாக்கப்பட்டிருந்த


koneswaram temple 2015
www.geevanathy.com

...

இலக்கியங்கள் எல்லாம் மக்கள் இலக்கியங்களாக மாற்றம் பெற்றன. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை அவர்களது பாடல்களில் உயிர்த்துடிப்புடன் கையாண்டனர். அத்துடன் நாட்டார் மரபுகளையும் அவர்கள் பயன்படுத்தினர். இவற்றுடன் இனிய இசையும் இணைந்து கொண்டதால் அவை இலகுவாக மக்களைச் சென்றடைவது சாத்தியமாயிற்று. இவர்கள் தமது பக்தி இலக்கியத்தில் தமிழ் மொழியை தெய்வமொழியாக உணர்ச்சிப் பெருக்குடன் பாடும் புதிய பண்பையும் உருவாக்கினர்.

இத்தகைய பின்னணியிலேயே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பக்தி இயக்கப்பணிகள் நோக்கத்தக்கது. தமிழ்ப்பக்தி இயக்க வரலாற்றில் தூர சிந்தனையுடன், மிகவும் திட்டமிட்ட முறையில் தனது போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி வழி நடத்திச் சென்றவர் சமய குரவர்களுள் முதல்வராகக் கருதப்படும் திருஞானசம்பந்தர். அதனால்தான் பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார் சுவாமிகள் தமது நூலில் பெரும்பகுதியை சம்பந்தருக்கு ஒதுக்கிச் சிறப்பித்திருக்கிறார்.

***4286*** செய்யுள்களைக் கொண்ட பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தரின் வரலாறு மட்டும் ***1256*** செய்யுள்களில் அமைந்துள்ளது அவரின் சிறப்பினை நமக்கு உணர்த்துகிறது. பெரியபுராணத்தில் பிள்ளையாகிய திருஞானசம்பந்தருக்கு கொடுக்கப்பட்ட இடத்தினைக் கொண்டு 'பிள்ளைபாதி, புராணம்பாதி' என அழைக்கும் வழக்கம் உருவானதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தரின் தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ***7 ஆம்*** நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சேர்ந்தவராகக் கருதப்படும் திருஞானசம்பந்தர் , திருநாவுக்கரசர் , சிறுத்தொண்டர் என்றழைக்கப்படும் பரஞ்சோதியார் போன்ற நாயன்மார்களின் சமகாலத்தவர். சோழவள நாட்டில் பிறந்தவரான திருஞானசம்பந்தர் சிறுவயது முதல் சைவசமய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டவர். பின் வந்த சமயகுரவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

திருஞானசம்பந்தரது பதிகங்களில் காணப்படும் பொதுப்

பண்புகளை நோக்குவதன் மூலம் தான் நினைத்த இலக்கினை அடைய அவர் கையாண்ட வழிமுறைகளை அறிந்து கொள்ள முடியும். இதனை விரிவாக அறிய திருஞானசம்பந்தர் திருக்கோணேச்சரம் மீது பாடியருளிய பதிகத்தின் பண்புகளை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருஞானசம்பந்தரது ஏனைய பதிகங்களுடன் ஒப்பிடுகையில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேச்சரம் மீது பாடப்பட்டவை அதிக சிறப்புப் பொருந்திய பதிகங்களாகும். தமிழகத்தில் பெரும்பாலான தலங்களுக்குச் சென்று அவ்வாலயங்கள் பற்றி அவர் ஆய்வு செய்த பின்னரே அவ்வாலயங்கள் மீது பதிகம் பாடினார். ஆனால் ஈழத்திற்கு வருகைதராமலே அங்கு தலயாத்திரை செய்து வந்த அடியார்கள் மூலம் தான் அறிந்து கொண்டவற்றைக் கொண்டு அவ்வாலயங்கள் மீது பதிகம் பாடினார் என்பது இந்தச் சிறப்புக்கு காரணமாகும்.

பக்தி இயக்கத்தினை வழிநடத்தியவர்களில் மிக இளவயதுக்காரரான திருஞானசம்பந்தர் தனது பணியினைச்


கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.
koneswaram temple 2015
www.geevanathy.com

…

சிறப்புறச் செய்வதற்காக சில ஒழுங்குமுறைகளைக் கையாண்டார். தலங்களைப் பாடுவதற்கு பத்துப் பாடல்களைக் கொண்ட பதிகம் என்னும் அமைப்பினைத் தெரிவு செய்தமை அதில் முதன்மையானது. இத்தெரிவுக்கு அவருக்கு வழிகாட்டியாக இருந்தவர் தமிழ் பக்தி இயக்கத்தின் ஆரம்பகர்த்தாவான காரைக்கால் அம்மையாராவர்.

இப்பதிகங்கள் அடியார் கூட்டங்களுடன் தலங்களைத் தரிசிக்கச் செல்லும் போது பாடுவதற்கு ஏற்றதாகவும்,கோயிலைச் சுற்றி வலம் வந்து பாடுவதற்கு ஏற்றதாகவும் அமைந்திருந்தது. இறைவன் புகழ் பரப்ப எண்ணங் கொண்ட ஞானசம்பந்தர் தான் மட்டுமல்லாது தனக்குப் பின்வந்தோரும் பங்கு கொள்ளும் வகையில் திட்டமிட்ட முறையில் தன்பணியைச் சிறப்பாகச் செய்ய பதிகத்தைத் தெரிவு செய்தார் எனலாம்.

சமயக் கருத்துக்களை தனிமனே பாடுவதற்குப் பதிலாக அவற்றைக் குறிப்பிட்ட தலங்களின் மேல் பாடுவதன் மூலம் அப்பிரதேச மக்களிடையே இலகுவாக சைவசமயக்

கருத்துக்களின் செல்வாக்கினைப் பெருக்கலாம் என்ற சம்பந்தரின் எண்ணமே இதற்கு அடிப்படைக் காரணமாகும். இதனால் பெரும்பான்மையான சம்பந்தரின் பதிகங்களின் முதல் இரண்டு அல்லது மூன்று வரிகள் இறைவனைப் புகழ்ந்து பாடுவதாகவும், அவனது அருட்செயல்களை வரிசைப்படுத்திக் கூறுவதாவவும் அமைந்திருப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இதனை நாம் கோணேசர் பதிகத்திலும் காணலாம்.

**பாடல் எண் : 1**

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி

வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்

(பாம்பினை மாலையாக அணிந்த சிவபெருமானின் வலது திருவடியில் வீரக்கழலும், இடது திருவடியில் சிலம்பும் ஒலிக்கின்றன. தனது திருமேனியில் திருநீறு அணிந்த இவர் பாசங்களில் இருந்து நீங்கியவர். மலைமகளை ஒரு பாகமாகக் கொண்டவர். இடபக்கொடி உடையவர்.)

***பாடல் எண் : 2***

கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்

பிடியன நடையாள் பெய்வளை மடந்தை பிறைநுத லவளொடு முடனாய்க்

*(விரைவாகப் பாய்ந்து வந்த யானையின் தோலினை உரித்துத் தனது திருமேனிமேல் போர்த்திக் கொண்டவர் சிவபெருமான். அவர் பெண்யானை போன்ற நடையையும்,பிறை போன்ற நெற்றியையும், வளையல்களை அணிந்தவருமாகிய உமா தேவியை ஒரு பாகமாக உடையவர்.)*

***பாடல் எண் : 3***

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம் படர்சடை முடியிடை வைத்தார்

கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக மாகமுன் கலந்தவர் மதின்மேல்

தனித்தபே ருருவ விழித்தழ னாகந் தாங்கிய மேருவெஞ் சிலையாக்

குனித்ததோர் வில்லார்

*(சிவபெருமான் தனது படர்ந்த சடைமுடியில் குளிர்ச்சியான ,இளமையான சந்திரனையும், பசுமையான தலையையுடைய பாம்பையும் அணிந்துள்ளார். மேரு மலையை வில்லாகக் கொண்டு, வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கொண்டு, அக்கினியைக் கணையாகக் கொண்டு முப்புரத்தை அழித்த ஆற்றலுடையவர் இவர் கனிபோன்ற சிவந்த வாயையுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடையவர்.)*

***பாடல் எண் : 4***

*பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப் பாங்குடை மதனனைப் பொடியா*

*விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த விமலனார் கமலமார் பாதர்*

*(சிவபெருமான் பெருக்கெடுத்து வந்த கங்கை நதியின் வேகத்தைக் குறைத்து அதனை தனது சடையில் தாங்கிக் கொண்டவர். அழகிய மன்மதனை தனதுநெற்றிக்கண்ணால் சாம்பலாக்கியவர். பின் மன்மதனின் தேவி கேட்டுக் கொண்டதிற்கு இணங்க அவனை உயிர்ப்பித்து அவளுக்கு மட்டும் தெரியும்படி*

*அருள்செய்தவர். இயல்பாகவே பாசங்களின் நீங்கிய இவர் தாமரை போன்ற பாதங்களை உடையவர்.)*

***பாடல் எண் : 5***

*தாயினு நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்*

*வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண்பல வேடர்*

*நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி நுழைதரு நூலினர்*

*(அடியவர்கள் தாயைவிட நல்ல தலைவர் என்று சிவபெருமானின் திருவடிகளைப் போற்றிப் பாடுவர். அவர் அடியார்களின் வாயிலும், மனத்திலும் நீங்காத மாண்புடையவர். பல கோலங்களை உடையவர். மார்பில் முப்புரிநூல் அணிந்தவரான இவர் தம்மை வழிபடும் தொழிலுடைய அடியவர்களுக்கு நோய், பிணி முதலியன வராதவண்ணம் காப்பவர்.)*

***பாடல் எண் : 6***

*பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்*

திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ் செம்மையார் நம்மையா ளுடையார்

*(பக்தி பெருக்கெடுக்கும் நல்ல மனத்தால் அன்பு பெருக வழிபடும் மார்க்கண்டேயரின் உயிரைக் கவரவந்த காலனை உதைத்துப் அவருக்கு அருள் புரிந்த செம்மையான நிறமுடையவர் சிவபெருமான். இவர் இச்செயலை இறைவழிபாடு வினைப்பலனைச் சாராமல் காக்கும் என்ற சைவக் கொள்கைக்கு முரண்படாவண்ணம் நிகழ்த்தினார். அத்துடன் இவர் ஆன்மாக்கள் ஆகிய நம்மை ஆட்கொள்பவர்.)*

பக்திச் சுவை நிறைந்த கோணேசர் பதிகத்தின் ஏழாவது பதிகம் நமக்குக் கிடைக்கவில்லை. மேலே நாம் பார்த்த பதிகங்கள் கண்மூடிப் பொருளுணர்ந்து பாடும் அடியவர் மனத்தில் பக்திப் பரவசத்தை ஊற்றெடுக்க வைக்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

'குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரே' என்று கண்மூடிப் பாடுகையில் இன்றும் நமக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்படும். இது பிரதேச

உணர்ச்சியைப் பயன்படுத்தி சைவசமய மறுமலர்ச்சியில் மக்களைத் தாமாக முன்வந்து உழைக்கச் செய்ய அவர் கையாண்ட வழிமுறையாகும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் குறிப்பிட்ட தலத்தின் பெயரினை இணைத்துப் பாடும் வழக்கம் காரைக்கால் அம்மையாரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அங்கங் குளிர்ந்தன லாடும் எங்கள்

அப்ப னிடந்திரு ஆலங் காடே

என்ற காரைக்கால் அம்மையாரின் திருவாலங்காட்டுத் திருப்பதிகம் இதற்குச் சான்றாகிறது. எனவே இந்த வழிமுறையைப் பின்பற்றி ***'கோணமலையமர்ந்தாரே'*** என்று பாடிய சம்பந்தரின் பதிகங்கள் சமய உணர்வை மட்டுமின்றி நமக்கு பிரதேச உணர்வை ஊட்டுவதோடு இன்று திருகோணமலைப் பிரதேசத்தின் வரலாற்றை ஆராய்வோருக்கு உதவும் ஓர் ஆவணமாகவும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

***பாடல் எண் : 1***

கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங்

கனமணி வரன்றிக்

குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே.

*(சந்தனக் கட்டைகளும், கரிய அகில் கட்டைகளும், அளவில்லாதமாணிக்கக் கற்களும் கடற்கரையினில் சேர, ஒலிக்கின்ற கடலின் அலைகள் முத்துக்களைக் கொழிக்கும் கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)*

***பாடல் எண் : 2***

கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து கொள்ளமு னித்திலஞ் சுமந்து

குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமா மலையமர்ந் தாரே.

*(பிறர் கொடியது என்று அஞ்சும்அளவு அலைகளையுடைய ஒலிக்கின்ற கடல் முத்துக்களைச் சுமந்து வந்து மக்களுக்கு வழங்கும் வளமிக்க கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)*

***பாடல் எண் : 3***

குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.

*(ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த கோணமாமலையில் வீற்றிருக்கிறார்.*

*)*

***பாடல் எண் : 4***

தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ் செம்பொனு மிப்பியுஞ் சுமந்து

கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமா மலையமர்ந் தாரே.

*(ஆரவாரத்துடன், செழுமையான முத்துக்கள், செம்பொன், இப்பி(சங்கு,சிப்பி) இவற்றைத் திரளாக அலைகள் கரையிலே சேர்க்கும் கோணமாமலை என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)*

***பாடல் எண் : 5***

ஞாலம் ,

கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.

*(இவ்வுலகில், திருக்கோயிலும், சுனையும் கடலுடன் சூழ*

*விளங்கும் கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)*

***பாடல் எண் : 6***

விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்

குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமா மலையமர்ந் தாரே.

*(விரிந்து உயர்ந்த மல்லிகை, மாதவி, புன்னை, வேங்கை, செருந்தி, செண்பகம், முல்லை ஆகிய சோலைகள் சூழ்ந்த கோணமாமலையில் சிவபெருமான் வீற்றிருக்கிறார்.)*

*இப்பதிகங்களின் வரிகள் இயற்கையில் அவருக்கிருந்த ஈடுபாட்டை நமக்கு உணர்த்துவதாய் அமைந்துள்ளன. அவர் நேரில் தரிசித்திராத திருக்கோணேச்சரர் ஆலயத்தின் சூழலை தலயாத்திரை வந்துசென்ற அடியவர்கள் மூலம் அறிந்துகொண்டு அந்த அழகினை தனது மனக்கண்களால் பருகி* ***'குரைகடல் ஓதம்'*** *என்று ஆர்பரிக்கும் கடலினை விழித்து அங்கு வீற்றிருக்கும் இறைவனின் அழகினைப் பாடியிருக்கிறார் சம்பந்தர்.*

*தலங்களின் மேல் பதிகங்கள் பாடுவதின் மூலம் சைவசமயக்*

கருத்தக்களை இலகுவாக பக்தர்களிடம் கொண்டு சேர்க்க நினைத்த ஞானசம்பந்தர் இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக தமிழ் நாட்டுத் தலங்களின் வரிசையில் கடல்கடந்த ஈழத்துச் சிவத்தலங்களான திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் என்பனவற்றை இணைத்துக் கொண்டார். இச்செயல்முறையானது கடல் கடந்த தேசங்களில் சைவசமயம் செல்வாக்குச் செலுத்த உறுதுணை புரியும் என அவர் நம்பினார். அத்துடன் அவருக்குப் பின்வந்தவர்களுக்கும் வழிகாட்டினார்.

ஞானசம்பந்தரைத் தொடர்ந்து அவர் சமகாலத்தவரான **7ஆம்** நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் (அப்பரடிகள்) ’ தெக்காரும்மாகோணத்தானே’ என்றும், **9ஆம்** நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ‘மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே’ என்றும், **12ஆம்** நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் ‘ஆழிபுடைசூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்னு திருக்கோணமலை மகிழ்ந்த செங்கண்மழவிடையார்’ எனப் பெரியபுராணத்திலும், **14ஆம்** நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி

சிவாச்சாரியார் ‘மன்னு திருக்கோணமாமலையின் மாதுமை சேர் பொன்னே கோணேசப்புரத்தானே’ என்றும் , **15ஆம்** நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் ‘திருக்கோணாமலை தலத்தாறு கோபுர நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே’ என்றும், **16ஆம்** நூற்றாண்டில் வாழ்ந்த குருநமச்சிவாய தேசிகர் ’கோணமா மலையில் வாழும் கோதிலா ஆதியே நீ’என்றும் போற்றிப்பாடிட முன்னுதாரணமாக இருந்தவர் ஞானசம்பந்தர்.

இதைத் தொடர்ந்து சம்பந்தர் தான் பாடிய பதிகங்களின் எட்டாவது பாடல் இராவணன் பற்றிய குறிப்பினை கொண்டிருக்கும் வகையில் அமைத்திருக்கிறார். இராவணன் தமிழ்வீரன் என்பதும், அவன் சிறந்த சிவபத்தனாகத் திகழ்ந்தான் என்பதும் புராணக் கதைகள் வாயிலாக நமக்குக் கிடைக்கும் செய்தியாகும். இப்புராணக் கதை மரபினை பதிகங்களில் பயன்படுத்தும் வழக்கினை ஆரம்பித்து வைத்தவர் சம்பந்தப் பெருமானாகும். இது பிற்காலத்தில் நாயன்மார்கள் தமது பாடல்களில் இவற்றை இணைத்துக் கொள்ள பெரும் உதவியாக

இருந்தது.

சம்பந்தர் தமது பதிகங்களில் கையாண்ட பொது மரபினையே திருக்கோணேச்சர பதிகத்திலும் கையாண்டள்ளார் என்பதற்கு திருஆலவாய் திருநீற்றுப் பதிகம் உதாரணமாகும். ‘இராவணன் மேலது நீறு’ இரவின் (கரிய) வண்ணம் கொண்ட சிவபக்தன் **இராவணன்** தன் அங்கமெல்லாம் அணிவது திருநீறு என்று திருநீற்றின் பெருமை பாடிச்செல்லும் இப்பதிகம். சிவபக்தனான இராவணனைக் கொண்டாடுகிறது. அதுபோலவே திருக்கோணேச்சரப் பதிகமும்

***பாடல் எண் : 8***

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா லேத்திட வாத்தமாம் பேறு

தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு மிறப்பறி யாதவர் வேள்வி

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை தன்னருட் பெருமையும் வாழ்வும்

கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர் கோணமா மலையமர்ந் தாரே.


koneswaram temple
www.geevanathy.com

...

*(கயிலைமலையை வெட்டி எடுக்க நினைத்த இராவணனின் செருக்கைத் தம் திருப்பாத விரலினால் ஊன்றி அழித்தவர் சிவபெருமான். இருந்தும் அவன் மனந்திருந்தி போற்றிப் பாடியதைக் கண்டு விருப்பத்துடன் வெற்றி வாளும், நீண்ட வாழ்நாளும் இராவணனுக்கு அருளியவர். செல்வத்தோடு கூடிய பிறப்பும், இறப்பும் அறியாதவர். சிவனை வணங்காது தக்கன் செய்த வேள்வியைத் தடுத்தவர். வனப்பு மிகுந்த உமாதேவியை ஒருபாகமாக கொண்டவர். உயிர்களிடத்துக் கருணைகொண்டு தன்னருட் பெருமையும், வாழ்வும் கொடுத்தவர். இத்தகைய பெரும்புகழையுடைய சிவபெருமான் கோணமலையில் வீற்றிருக்கிறார்.)*

இராவணேஸ்வரனின் செருக்கினை அழித்துப்பின் அவனது சிவபக்தியினை மெச்சி வேண்டும் வரங்களைக் கொடுத்த கோணமலையான் என்று பாடுகிறார் சம்பந்தர்.

திருக்கோணேச்சரமும் அதனுடன் தொடர்புகளைப் பலமாகக் கொண்ட இராவணேஸ்வரனும் இனிய இசையுடன் கூடிய

பாடல் வடிவமாக உலகமெலாம் உள்ள சிவபக்தர்களிடம் சென்று அவர்கள் மனத்தினை இறுகப் பற்றிக்கொள்ள வழியமைக்கிறார் ஞானசம்பந்தர். இதில் மற்றொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்தின் ஒன்பதாவது பாடல்களில் பிரமா, விஷ்ணு ஆகிய தெய்வங்கள் அடிமுடி தேடிய கதையினைச் சொல்லும் வழமையைக் கொண்டவராகக் காணப்படுகிறார். அவர் பிரம்மா, விஷ்ணு முதலிய தெய்வங்களுக்கு முன்பாக எட்டாவது பதிகத்தில் இராவணனைப் பாடவதன் மூலம் இராவணேஸ்வரனுக்கு முக்கியத்துவம் கொடுக்க முனைந்திருக்கிறார் என்றே கருதவேண்டியுள்ளது.

இன்று திருகோணமலை மண்ணில் ஆழவேரூன்றியிருக்கும் இராவணன் தொடர்பான கருத்துக்கள் தட்சண கைலாய புராணம், திரிகோணாசலப் புராணம் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டவை. இராவணன் தனது தாயாரின் வணக்கத்திற்காக திருக்கோணேச்சரத்தினை நகர்த்த முற்பட்டு வாளினால் வெட்டினான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இன்றுவரை ‘இராவணன் வெட்டு’ என்றழைக்கப்படும் இடம்

இருக்கிறது. அத்துடன் அவனது தாயாரின் ஈமைக்கிரிகைக்காக உருவாக்கியதாகக் கருதப்படும் ‘கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள்’ மற்றும் இராவணன் தொடர்புடைய ஏனைய அம்சங்கள் திருகோணமலை வாழ் மக்களிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவிவரும் நம்பிக்கைகளாக இருக்கிறது. எனவேதான் இராவணனை திருக்கோணேச்சரத்துடன் தொடர்புபடுத்திப் பாடிய சம்பந்தரின் பதிகம் இலகுவாக திருகோணமலை மக்களின் மனத்தினை வென்றது. அதுபோலவே இதே நம்பிக்கையுடைய ஈழநாட்டின் ஏனைய பகுதிகளிலும், தமிழ் நாட்டிலும் உள்ள அடியவர்கள் மனத்தில் பக்தியுடன் கூடிய தமிழுணர்வை ஊட்டியது.

சம்பந்தரின் ஒன்பதாவது பாடல் சிவனுடைய அடிமுடி தேடி பிரமனும், திருமாலும் அலைந்த கதையினை நினைவூட்டுவதாக அமைந்திருக்கும். அந்த நாட்களில் பிரிந்து முரண்பட்டு நின்ற சைவ, வைணவ மதங்களை ஒருங்கிணைத்து தனியொரு கடவுளாக்கும் தேவை அப்போதிருந்தது. இவ்விரு சமயங்களும் ஒன்றுபட்டு செயற்படாவிட்டால் அரச ஆதரவுடன் பரவிக்கொண்டிருந்த

சமண, பௌத்த மதங்களை எதிர்கொள்ளும் ஆற்றல் இல்லாமல் போய்விடும் என்பதை சம்பந்தர் நன்குணர்ந்திருந்தார். எனவே

**பாடல் எண் : 9**

அருவரா தொருகை வெண்டலையேந்தி யகந்தொறும் பலியுடன் புக்க

பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப் பெருங்கடல் வண்ணனும் பிரமன்

இருவரு மறியா வண்ணமொள் ளெரியா யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்

குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக் கோணமா மலையமர்ந் தாரே.

(அருவருப்பு ஏதுமில்லாமல் பிரமனின் வெண் தலையைக் கையிலேந்தி வீடுகள்தோறும் சென்று பிச்சை ஏற்று உண்ணும் பெருமையுடையவர். சீர்மை பொருந்திய பெருங்கடலில் துயில்கொள்ளும் திருமாலும், பிரமனும் அடி,முடி அறியமுடியாத வண்ணம் ஒளியுடைய பெரிய நெருப்புப் பிழம்பாய் உயர்ந்து நின்றவர். திருமால் தாமரை போன்ற தன் கண்ணையே பூவாக அர்ச்சனை செய்யக் குருவாய் விளங்கியவர். அடியவர்கள்,

ஒலிக்கின்ற வீரக்கழல்கள் அணிந்த தம் திருவடிகளை வணங்கும் வண்ணம் கோணமலையில் வீற்றிருக்கிறார்.)

மேற்கூறிய பாடல் மூலமாக தனிப்பெருங்கடவுளாக சிவனைக்காட்ட அவர் முயல்கிறார். இக்காலகட்டத்தில் சிவனையும், திருமாலையும் ஒரே உருவமாக வழிபடும் ஹரிஹர மூர்த்தி வழிபாடு தோன்றியதும் குறிப்பிடத்தக்கது.

சம்பந்தரது பத்தாவது பதிகம் சமண, பௌத்த சமயங்களின் கொள்கைகளுக்கு எதிரான வாதங்களை முன்வைப்பதாகவும் அவர்களது போலிவேடம், ஒழுக்கக் கேடுகள் என்பனவற்றை முன்னிலைப்படுத்தி அவற்றினைப் பொதுமக்களிடம் அம்பலப்படுத்துவதன் மூலம் சைவ சமயத்தை முன்னிலைப்படுத்துவதாக அமைந்திருக்கும்.

தமிழ் நாட்டில் சைவ சமயத்தை நிலைநிறுத்த எண்ணியது போலவே ஈழத்திலும் அக்கைங்கரியத்தைச் செய்யும் நோக்குடையவராகச் செயல்பட்டார் அவர். அக்காலச் சூழலில் திருகோணமலையில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு

எப்படியிருந்தது என்பது பற்றிய தெளிவான வரலாற்றாதாரங்கள் அவருக்கு கிடைக்காவிட்டாலும் சைவ சமயத்தை அழிக்க முனையும் பிறமதங்களை கண்டிக்க அவர் பின்னிற்கவில்லை என்பதையே பின்வரும் வரிகள் நமக்கு நன்குணர்த்துகின்றன.

**பாடல் எண் : 10**

*நின்றுணுஞ் சமணுமிருந்துணுந் தேரு நெறியலா தனபுறங் கூற*

*வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான் மெல்லிய லொடுமுட னாகித்*

*துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக்*

*குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங் கோணமா மலையமர்ந் தாரே.*

*(நின்றுண்ணும் சமணர்களும், இருந்துண்ணும் புத்தர்களும் சிவபெருமானைப் பற்றி நெறியல்லாதனவற்றைச் சொல்லி புறங்கூறுகின்றனர். ஆனால் எம்பெருமானோ நஞ்சையே உண்டு தேவர்களைக் காத்த பெருமைக்குரியவர். மெல்லியலான உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்ட இவர் கடல் சூழ்ந்த*

மலையில் கடலலைகள் கரையினில் மோத, மல்லிகைச் சோலைமணம் வீச கோணமலையில் வீற்றிருக்கிறார்.)

பாடசாலைக் காலங்களில் கண்மூடி மனனம் செய்த சம்பந்தரின் பாடல்களில் புரியாத பல இலக்கிய நயங்கள் இப்போது புரிகிறது. ‘அவர்’ (**சமணர்**) நின்றுண்பவர், ‘இவர்’ (**பௌத்தர்**) இருந்துண்பவர். ‘என்பெருமானார்’ ஈசனோ **நஞ்சை**யே உண்ணும் வல்லமை படைத்தவர் என்று இடித்துரைக்கிறார் சம்பந்தப்பெருமானார். அவரது இந்தப் பதிகம் சமண, பௌத்த சமயங்கள் மீது அவருக்கிருந்த வெறுப்புணர்வை உணர்த்துவதாக அமைந்துள்ளது. சைவசமயம் வலிகுன்றக்காரணமாக இருந்த சமயங்கள் என்றரீதியில் அவற்றினை இழிவுபடுத்தியிருக்கிறார் என்றே நாம் கருதவேண்டியுள்ளது.

இறுதியாகவரும் கோணேசர் பதிகத்தின் பயன் சொல்லும் முத்திரைக் கவிதை இவ்வாறு அமைந்துள்ளது.

**பாடல் எண் : 11**

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த கோணமா

மலையமர்ந் தாரைக்

கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம் பந்தன்

உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்

சுற்றமு மாகித் தொல்வினை யடையார் தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

*(குற்றமில்லாத குடிமக்கள் வாழ்கின்ற ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த கோணமலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானை, கற்றுணர் ஞானமும் கேள்வி ஞானமும் உடைய சீர்காழிவாழ் மக்களின் தலைவரான சிவஞானக் கருத்துடைய சம்பந்தன் செந்தமிழில் அருளிய இப்பதிகத்தை உரைப்பவர்களும் கேட்பவர்களும் உயர்ந்தோர் ஆவர். அவர்களுடைய சுற்றத்தாரும் எல்லா நலன்களும் பெற்றுத் தொல்வினையிலிருந்து நீங்கப் பெறுவர். சிவலோகத்தில் பொலிவுடன் விளங்குவர்.)*

இங்கு தன்னை *'கற்றுணர் ஞானமும், கேள்வி ஞானமும் உடைய சீர்காழி வாழ் மக்களின் தலைவரான சிவஞானக் கருத்துடைய சம்பந்தன்'* என்று பதிவு செய்கிறார்.


www.geevanathy.com

...

கோணேசர் பதிகத்தினைப் போலவே ஏனைய பதிகங்களின் முத்திரைக் கவிதைகளில் ‘நற்றமிழ் ஞானசம்பந்தன்’ ‘தமிழ் ஞானசம்பந்தன்’ ‘சம்பந்தன் செய்த தமிழ் மாலை’ ‘தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்’ என்றுவிளிக்கிறார். இதன் மூலம் மிகத்தெளிவாக மொழி (**தமிழ்**) உணர்வு ஊடாக பக்தி மார்க்கத்தினைப் புத்துயிர் பெறச் செய்ய சம்பந்தர் முயற்சித்து வெற்றிகண்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

‘தேசிய இலக்கியம்’ என்ற நூலில் அதன் ஆசிரியரான திரு.அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் ‘தமிழ்முரசு கொட்டி, தமிழ்க் கொடியேந்தி, தமிழ்க் கவிதையால் தமிழ்க்கடவுளைப் பாடிதுதிக்கும் தமிழினத்தைத் தட்டியெழுப்பிய வீரத் தமிழராக’ திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைப் பார்க்கிறார். அது மிகப்பொருத்தமானதே.

மக்கள் மத்தியில் சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு ஏற்ற ஊடகமாக இசையுடன் பாடக்கூடிய தேவாரத்தைத் தெரிவு செய்து, மக்களை அணிதிரட்டச் செய்ய பக்தி இரசத்தையும், மொழி

உணர்வையும் (தமிழ்) இனஉணர்வையும் (இராவணன்) சமவிகிதத்தில் கலந்து சமண, பௌத்த மதங்களுக்கான எதிர்ப்புணர்வையும் நயத்துடன் புகுத்தி தனது இலட்சியத்தில் வெற்றி பெற்ற தோடல்லாமல் பின் வந்தவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறார் ஞானசம்பந்தர். தன் காலத்தில் சைவத்தின் எழுச்சியை தமிழின் எழுச்சியாக்க முற்பட்டிருக்கிறார் சம்பந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் தீண்டாக் குடம்பத்தைச் சேர்ந்தவராகக் கருதப்பட்ட திருநீலகண்டர் என்பவரை தம்முடன் யாழ் இசைப்பதற்காக அழைத்துச்சென்ற இவர் சாதி வேறுபாடு, தீண்டாமை முதலிய மூடநம்பிக்கைகளை உடைத்தெறிய முயன்றிருக்கிறார். அத்துடன் தேவாரம் பாடி கோவிற்கதவு திறக்கப்பட்ட கதைமூலம் வேதப்பொருள் தெரியாமல் இருந்த சாதாரண தமிழ் மக்களுக்கு வேதப்பொருளினை தமிழில் அறியச்செய்ய திருஞானசம்பந்தர் பாடுபட்டிருக்கிறார் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

மக்களுடைய நம்பிக்கைகள் தளர்ந்து, சமயம் தளர்வுற்றிருந்த காலத்தில் பக்தி இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்ல உறுதி பூண்டவர் ஞானசம்பந்தர். அவர் பதிகம் பாடி சுமார் **1350** ஆண்டுகளுக்குப் பின்னால் கடல் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் கோணமலைக் குன்றில் வீற்றிருக்கும் திருக்கோணேசப் பெருமானைக் கண்மூடி 'குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலை யமர்ந்தாரே' என்று தியானிக்கும் போது திருஞானசம்பந்தரின் திருவுருவம் மனக்கண்ணில் நிழலாடுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

# 3. திருஞானசம்பந்தர் அருளிய திருக்கோணமலைத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

*1*

*நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும் நிமலர்நீ றணிதிரு மேனி*

*வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடையர்*

*கரைகெழு சந்துங் காரகிற் பிளவு மளப்பருங் கனமணி வரன்றிக்*

*குரைகட லோத நித்திலங் கொழிக்குங் கோணமா மலையமர்ந் தாரே.*

*2*

*கடிதென வந்த கரிதனை யுரித்து அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்*

பிடியன நடையாள் பெய்வளை மடந்தை பிறைநுத லவளொடு முடனாய்க்

கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து கொள்ளமு னித்திலஞ் சுமந்து

குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமா மலையமர்ந் தாரே.

*3*

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம் படர்சடை முடியிடை வைத்தார்

கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக மாகமுன் கலந்தவர் மதின்மேல்

தனித்தபே ருருவ விழித்தழ னாகந் தாங்கிய மேருவெஞ் சிலையாக்

குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.

*4*

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப் பாங்குடை மதனனைப் பொடியா

விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த விமலனார் கமலமார் பாதர்

தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ் செம்பொனு மிப்பியுஞ் சுமந்து

கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமா மலையமர்ந் தாரே.

5

தாயினு நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்

வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண்பல வேடர்

நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்

கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரே.

6

பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்

திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ் செம்மையார் நம்மையா ளுடையார்

விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்

குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமா மலையமர்ந் தாரே.

*7*

கிடைக்கப் பெறவில்லை

*8*

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா லேத்திட வாத்தமாம் பேறு

தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு மிறப்பறி யாதவர் வேள்வி

தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை தன்னருட் பெருமையும் வாழ்வும்

கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர் கோணமா மலையமர்ந் தாரே.

*9*

அருவரா தொருகை வெண்டலையேந்தி யகந்தொறும் பலியுடன் புக்க

பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப் பெருங்கடல் வண்ணனும் பிரமன்

இருவரு மறியா வண்ணமொள் ளெரியா யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்

குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக் கோணமா மலையமர்ந் தாரே.

*10*

நின்றுணுஞ் சமணுமிருந்துணுந் தேரு நெறியலா தனபுறங் கூற

வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான் மெல்லிய லொடுமுட னாகித்

துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக்

குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங் கோணமா மலையமர்ந் தாரே.

*11*

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த கோணமா மலையமர்ந் தாரைக்

கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான் கருத்துடை ஞானசம் பந்தன்

உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்

சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

## 4. மறைந்துபோன திருக்கோணேச்சர வரலாற்று நூல் பெரியவளமைப் பத்ததி

சமூக வலைத்தளங்களின் அதீத செல்வாக்கு நிலவுகின்ற இக்காலத்தில் இலங்கைத் தமிழர் வாழ்வில் அவர்களது **பூர்வீக நிலங்கள்** தொடர்பில் பிரச்சனைகள் எழும்போது அப்பிரதேச வரலாறு தொடர்பில் பல்வேறு கேள்விகள், தேடல்கள், உரையாடல்கள், கவலைகள், இயலாமை வெளிப்பாடுகள் என்பன பொதுவெளியில் எழுந்து மறைவது வழமையாகி இருக்கிறது.

இத்தகைய காலப்பகுதியில் திருகோணமலையில் தமிழர் இருப்பினை உறுதிப்படுத்தும் முயற்சிகள் , முன்னகர்வுகள் பலராலும் மேற்கொள்ளப்படும் இன்றைய சூழ்நிலையில் திருகோணமலைத் தமிழர்களின் கைகளில சுமார் ஒருநூற்றாண்டுக்கு முன்னர் இருந்து **பாதுகாக்கப்படாமல் காணாமல்போன** பெரியவளமைப் பத்ததி தொடர்பில் சில

தகவல்களை இங்கு பதிவிடுவது அவசியமாகிறது.

வையாபாடல், இராசமுறை, பரராசசேகரன் உலா, கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, கோணேசர் கல்வெட்டு, பெரியவளமைப் பத்ததி, குளக்கோட்டன் கம்பசாத்திரம், மட்டக்களப்பு மான்மியம் என்பன இலங்கையில் எழுந்த வரலாறு கூறும் தமிழ் நூல்களாகும்.

இவற்றில் யாழ்ப்பாண வைபவமாலைக்கு மூலங்களாக அமைந்த **இராசமுறை, பரராசசேகரன் உலா** ஆகியனவும் கோணேசர் கல்வெட்டிற்கு ஆதாரமான **பெரியவளமைப் பத்ததி, குளக்கோட்டன் கம்பசாத்திரம்** என்பனவும் அழிந்தொழிந்துவிட்டன. அவற்றின் அழிவானது, **வரலாற்று ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்** என்று **பேராசிரியர் சி.பத்மநாதன்** அவர்கள் பதிவுசெய்திருக்கிறார்.

### பெரியவளமைப் பத்ததி

திருக்கோணேச்சரத்திற்கு திருப்பணிகள் செய்த குளக்கோட்டு

மன்னன் அவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகளும், ஆலய நிர்வாகமும் ஒழுங்குமுறை தவறாது நடைபெறுவதற்காகச் சட்ட திட்டங்களை உண்டாக்கி அதனைச் **செப்பேடு**களாக பெரியவளமைப் பத்ததியில் எழுதுவித்தான் என கோணேசர் கல்வெட்டு கூறுகிறது.

திருக்கோணேச்சரத்தின் பராமரிப்புக்காக உண்டாக்கப்பட்ட**நிலபுலங்கள்,** **கிராமங்கள்**, அங்கே குடியமர்த்தப்பட்ட மக்களின் கடமைகள், கோவிற் தொழும்புகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் கோவிலுக்குரிய திரவியங்கள். தானியங்கள். எண்ணெய் வகைகள், களஞ்சியப் பொருட்கள் முதலிய சேமிப்புகள் என்பனவற்றை **கனகசுந்தரப் பெருமாள்** என்ற பட்டம் பெற்றவர்கள் தலைமுறை தலைமுறையாக முறையாகப் பதிவுசெய்து வைத்திருந்தனர். எனினும் அவ்வரிய வரலாற்றுத் தரவுகளை நாம் இன்று இழந்து நிற்கிறோம்.

அண்மையில் **திரு.வே.** **அகிலேசபிள்ளை**



...



...

அவர்களின் **திருக்கோணாசல வைபவம்** தரும் தம்பலகாமம் தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளைத் தேடிக்கொண்டிருந்தபோது பெரியவளமைப் பத்ததி தொடர்புடைய முக்கிய பதிவொன்று கண்ணில் பட்டது. திருக்கோணாசல வைபவம் எனும் நூல் ***1889*** ஆம் ஆண்டளவில் திருகோணமலை திரு.வே.அகிலேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்டு ***1950***ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**திருக்கோணாசல வைபவம் தரும் பெரியவளமைப் பத்ததி தொடர்புடைய குறிப்பு**

திருக்கோணேச்சரத்தின் திரவிய இருப்பினைப் பதிவு செய்து பாதுகாக்கும் கனகசுந்தப்பெருமாளின் வம்சத்தவர்கள் திருக்கோணாசல நகரிலும், கட்டுக்குளப் பகுதியில் குச்சவெளியென்னுங் கிராமத்திலும், கொட்டியாரப்பகுதியில் சம்பூர், கிளிவெட்டி எனும் இடங்களிலும் தற்காலமிருக்கின்றார்கள். இதில் **குச்சவெளிப்பகுதி**யில் இருப்பவர்கள் தான்

தம்பலகமம் கோணநாயகர் கோயில் முன்னீடு செலுத்தி வருகிறார்கள். **பெரியவளமைப் பத்ததி என்னுஞ் செப்பேடும் அவர்கள் வசத்தில்தான் இருக்கிறது** என்கிறது *1889* ஆம் ஆண்டளவில் திரு.வே.அகிலேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட அக்குறிப்பு.

திருக்கோணேச்சரத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் பற்றிய முழுமையான விபரம் பெரியவளமைப் பத்ததி எனும் செப்பேட்டில் உடனுக்குடன் பதியப்படும் வழக்கம் இருந்ததையும் அப்பணியினைச் செய்யும் பொறுப்பு கனகசுந்தரப்பெருமாள் எனும் பட்டம் பெற்றவர்களின் வம்சத்தவரிடம் இருந்ததையும் தருகிறது இக்குறிப்பு.

இன்றைக்குச் சுமார் *130* வருடங்களுக்கு முன்னர் பெரியவளமைப் பத்ததி குச்சவெளிப்பகுதியில் இருந்த கனகசுந்தப்பெருமாளின் வம்சத்தவர்களிடம் இருந்தது பற்றி திரு.வே. அகிலேசபிள்ளை அவர்கள் ஆவணப்படுத்தி இருக்கிறபோதும் அச்செப்பேடுகள் நமது இன்றைய

தலைமுறையினருக்கு கிடைக்கவில்லை என்பது பேரிழப்பே.

**பூர்வீக நிலங்கள், கிராமங்கள், திருக்கோணேச்சரத்தின் திரவிய இருப்பு** தொடர்பில் பூரண தரவுகளைக் கொண்ட ஆவணமாக எமது முன்னோர் பேணிக்காத்த அருஞ் செல்வம் பெரியவளமைப் பத்ததி.

திருக்கோணாசல வைபவம் குறிப்பிடும் **திருகோணமலை நகரப்பகுதி**, **குச்சவெளி, சம்பூர், கிளிவெட்டி, தம்பலகாமம்** அன்பர்கள் உங்கள் ஊரில் ***130*** ஆண்டுகளுக்கு முன்னால் உங்களது முன்னோர்கள் பேணிக்காத்த பெரியவளமைப் பத்ததி எனும் செப்பேடுகளுக்கு என்ன நடந்தது என்று முடிந்தவரை முயற்ச்சித்து தேடிப்பார்க்கலாம்.

### *மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:*

மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. *Kindle, Nook, Android Tablets* போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது *4000* முதல் *6000* ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.

### *ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:*

ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை *PDF, EPUB, MOBI, AZW3.* போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.

**தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:**

தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. *ProjectMadurai.com* எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஒர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் *PublicDomain*-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.

சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.

**சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?**

அமேசான் கிண்டில் கருவியில் தமிழ் ஆதரவு தந்த பிறகு, தமிழ் மின்னூல்கள் அங்கே விற்பனைக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றை நாம் பதிவிறக்க இயலாது. வேறு யாருக்கும் பகிர இயலாது.

சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும்,

சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் *Creative Commons* எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.

எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

**தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?**

கூடாது.

ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை "யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்" என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.

அதாவது "Creative Commons" எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.

அப்படி இல்லாமல் "All Rights Reserved" எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.

வேண்டுமானால் "All Rights Reserved" என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை "Creative Commons" உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி

நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.

பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு

அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்

வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச்

செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்"-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.

***FREETAMILEBOOKS.COM***

இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.

*PDF for desktop, PDF for 6" devices, EPUB, AZW3, ODT*

இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.

இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை

*எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.*

*அவ்வளவுதான்!*

**மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:**

1. *ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை "Creative Commons" உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்*
2. *தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்*
3. *சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்*

*விருப்பமுள்ளவர்கள் freetamilebooksteam@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.*

**இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?**

யாருமில்லை.

இந்த வலைத்தளம் முழுக்க முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.

மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், *ebook reader* ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.

**இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?**

ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.

ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.

அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப்

பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து *ebook reader* போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.

தற்போது மக்கள் பெரிய அளவில் *tablets* மற்றும் *ebook readers* போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

**நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?**

உள்ளது.

பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.

1. *http://www.vinavu.com*

2. *http://www.badriseshadri.in*

3. *http://maattru.com*

4. *http://kaniyam.com*

5. *http://blog.ravidreams.net*

**எவ்வாறு ஓர் எழுத்தாளரிடம் *CREATIVE COMMONS* உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?**

இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.

உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].

தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக *Mobiles* மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.

இந்நிலையில் நாங்கள் *http://www.FreeTamilEbooks.com* எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான *Desktop,ebook readers like kindl, nook, mobiles, tablets with an-*

*droid, iOS* போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும். அதாவது இத்தகைய கருவிகள் *support* செய்யும் *odt, pdf, ebub, azw* போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை *"Creative Commons"* உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

*http://creativecommons.org/licenses/*

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

*e-mail : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM*

*FB : https://www.facebook.com/FreeTamilEbooks*

*G plus: https://plus.google.com/communities/108817760492177970948*

நன்றி.

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் *"Creative Commons License"*-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும் மின்னஞ்சலை*FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM* எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

***ஓர் எழுத்தாளர் உங்களது உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?***

*அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.*

*ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.*

*அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.*

***மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?***

*ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.*

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-I பகுதி-II என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

**தவிர்க்க வேண்டியவைகள் யாவை?**

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?**

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- *EMAIL : FREETAMILEBOOKSTEAM@GMAIL.COM*
- *Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks*
- *Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948*

### இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

குழு – *http://freetamilebooks.com/meet-the-team/*

### *SUPPORTED BY*

கணியம் அறக்கட்டளை- *http://kaniyam.com/foundation*

**தொலை நோக்கு – *Vision***

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழல்

**பணி இலக்கு – *Mission***

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப,

தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

## தற்போதைய செயல்கள்

- கணியம் மின்னிதழ் – http://kaniyam.com/
- கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இலவச தமிழ் மின்னூல்கள் – http://FreeTamilEbooks.com

## கட்டற்ற மென்பொருட்கள்

- உரை ஒலி மாற்றி – *Text to Speech*
- எழுத்துணரி – *Optical Character Recognition*
- விக்கிமூலத்துக்கான எழுத்துணரி
- மின்னூல்கள் கிண்டில் கருவிக்கு அனுப்புதல் – *Send2Kindle*

- *விக்கிப்பீடியாவிற்கான சிறு கருவிகள்*
- *மின்னூல்கள் உருவாக்கும் கருவி*
- *உரை ஒலி மாற்றி – இணைய செயலி*
- *சங்க இலக்கியம் – ஆன்டிராய்டு செயலி*
- *FreeTamilEbooks – ஆன்டிராய்டு செயலி*
- *FreeTamilEbooks – ஐஒஎஸ் செயலி*
- *WikisourceEbooksReportஇந்திய மொழிகளுக்ககான விக்கிமூலம் மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்*
- *FreeTamilEbooks.com – Download counter மின்னூல்கள் பதிவிறக்கப் பட்டியல்*

### அடுத்த திட்டங்கள்/மென்பொருட்கள்

- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- முழு நேர நிரலரை பணியமர்த்தி பல்வேறு கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்குதல்
- தமிழ் NLP க்கான பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல்
- கணியம் வாசகர் வட்டம் உருவாக்குதல்
- கட்டற்ற மென்பொருட்கள், கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் வளங்களை உருவாக்குபவர்களைக் கண்டறிந்து ஊக்குவித்தல்
- கணியம் இதழில் அதிக பங்களிப்பாளர்களை உருவாக்குதல், பயிற்சி அளித்தல்
- மின்னூலாக்கத்துக்கு ஒரு இணையதள செயலி
- எழுத்துணரிக்கு ஒரு இணையதள செயலி
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

- http://OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்
- தமிழ்நாடு முழுவதையும் http://OpenStreetMap.org ல் வரைதல்
- குழந்தைக் கதைகளை ஒலி வடிவில் வழங்குதல்
- http://Ta.wiktionary.org ஐ ஒழுங்குபடுத்தி API க்கு தோதாக மாற்றுதல்
- http://Ta.wiktionary.org க்காக ஒலிப்பதிவு செய்யும் செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுத்துப் பிழைத்திருத்தி உருவாக்குதல்
- தமிழ் வேர்ச்சொல் காணும் கருவி உருவாக்குதல்
- எல்லா http://FreeTamilEbooks.com மின்னூல்களையும் Google Play Books, GoodReads.com ல் ஏற்றுதல்
- தமிழ் தட்டச்சு கற்க இணைய செயலி உருவாக்குதல்
- தமிழ் எழுதவும் படிக்கவும் கற்ற இணைய செயலி

உருவாக்குதல் ( aamozish.com/Course_preface போல)

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

## வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், 100% வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும்.இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும்

மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், *GNU GPL, Apache, BSD, MIT, Mozilla* ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

# நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை *kaniyamfoundation@gmail.com* க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

***Kaniyam Foundation***

***Account Number : 606 1010 100 502 79***

***Union Bank Of India***

***West Tambaram, Chennai***

***IFSC – UBIN0560618***

***Account Type : Current Account***

## *UPI செயலிகளுக்கான QR Code*

BHIM UPI Payments Accepted at

**Kaniyam Foundation**

**Account Number : 606101010050279, IFSC Code: UBIN0560618**

Scan and Pay using any UPI supported Apps

குறிப்பு: சில *UPI* செயலிகளில் இந்த *QR Code* வேலை செய்யாமல் போகலாம். அச்சமயம் மேலே உள்ள வங்கிக் கணக்கு எண், *IFSC code* ஐ பயன்படுத்தவும்.

*Note: Sometimes UPI does not work properly, in that case kindly use Account number and IFSC code for internet banking.*